முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 14 கோடியே 14 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, சென்னை, சைதாப்பேட்டை நாய் வளர்ப்பு பிரிவில் 5 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உள்நாட்டு நாய் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மையத்தின் விரிவாக்கக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி எஸ். அமிர்த ஜோதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில், உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கிய விவசாயிகள் – முதல் பரிசு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோ.சித்தர், இரண்டாம் பரிசு திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.வி.பழனிச்சாமி, மூன்றாம் பரிசு காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கு.எழிலன் ஆகியோருக்கு நம்மாழ்வார் விருதுகளையும், விருதிற்கான பரிசுத் தொகையையும் மற்றும் பதக்கமும் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையர் கோ. பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமாரவேல்பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதலமைச்சர் பிறந்தநாள் விழா! மார்ச் மாதம் முழுவதும்

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் நலஉதவிகள் வழங்கிடுவோம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி, மார்ச் 2-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனை கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். தொகுதி பொறுப்பாளர்கள் செஞ்சி அன்பழகன் ,மயிலம் ஜெராल்டு, திண்டிவனம் சிவ. ஜெயராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ரமணன், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

அப்போது கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற 33 மாதம் திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு உள்ளன.

தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியாவிற்கே ஆனவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். மணிப்பூர் பற்றி எரிகிறது அதை அணைக்க முடிய வில்லை, தமிழகத்தை பற்ற

வைக்க வேண்டும் என மோடி நினைக்கிறார். தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் இருப்பதால் அது நடக்காதுஎன தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

ஒன்றிய பிஜேபி மோடியின் ஆட்சியில் ஒவ்வொரு துறையிலும் நடைபெற்ற ஊழலை பட்டியலிட்டு சொல்ல வேண்டும் மற்ற மாநிலங்களிலும் இந்தியா முழுவதும் ஸ்டாலின் குரல் ஒலிக்கப்படுகிறது.

வரும் காலத்தில் இந்தியாவை ஆளப்போவது ஸ்டாலின் குரல் தான் அந்த ஸ்டாலின் குரல் மூலமாக மாபெரும் வெற்றி அடைந்து வரும் காலத்தில் இந்தியாவின் நிதிநிலை அறிக்கையில் ஸ்டாலின் குரல் ஒலிக்கும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

கூட்டத்தில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழாவை விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நகராட்சி பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மார்ச் மாதம் முழுவதும் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கியும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணப் பொருட்களை வழங்கியும், ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவினை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய நகர பேரூர் ஊராட்சிகளில் தினமும் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் தின்னை பிரச்சாரம் செய்வது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதனைகளை விளக்கி ஒவ்வொரு கிராமத்திலும் தெருமுனைப் பிரச்சார கூட்டங்கள் நடத்துவது சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் தீர்மானங்களை விளக்கி அனைத்து ஒன்றியங்கள் நகர பேரூர் கழகங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்துவது,

நாப்பதும் நமதே நாளையும் நமதே என்ற கலைஞரின் சொல்லுக்கு இணங்க 40 தொகுதிகளிலும் மக்கள் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் அவரை வெற்றி பெறச் செய்வதற்கு கழகத்தினர்தீவிரமாக பணியாற்றுவது,

முதலமைச்சரின் பிறந்த நாளில் அனைத்து பகுதிகளிலும் முதலமைச்சரின் அனைத்து சாதனைகளையும் விளம்பரப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீதாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செயற்குழு உறுப்பினர்கள் கதிரேசன், செல்வராஜ், மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை. ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், மணிமாறன், துரை, விஜயராகவன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன். இளம்வழுதி, பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர் செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத் ராஜ சக்தி, அன்சாரி, ஜி.ரவிச்சந்திரன், டாக்டர் சக்தி பிரியன், அண்ணாதுரை, கே.செந்தில் குமார், ப.செந்தில் குமார், கோ தமிழரசன், புலவர் தமிழரசன், விஜயராகவன், சிவகாமி, பிரசன்னா, திலகவதி, ராஜா, ரோமியன், காதர் நவாஸ், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சனமங்கலத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 28.02.2024 அன்று நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு பசுமைத் திட்டத்தின் கீழ் 1 கோடி மரக்கன்றுகள் நடும் விழாவில் மரக்கன்றுகள் ஏற்றிச்செல்லும் வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன், மகளிர் திட்ட இயக்குனர் ரமேஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.ஹேமலதா ஸ்ரீனிவாச பெருமாள் உள்ளிட்ட வளர்ச்சித்துறை மற்றும் மகளிர் திட்டம் அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மதுரை–அரசு இராஜாஜி மருத்துவமனையில் 313 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 தளங்கள் கொண்ட புதிய டவர் பிளாக் கட்டடம் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்கள், 29 கோடி ரூபாய் செலவில் அரசு இராஜாஜி மருத்துவமனை, தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனை, மதுரை அரசு மருத்துவக் கல்லூரி, உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, சமயநல்லூர், சுகாதாரம் மற்றும் குடும்பநல பயிற்சி மையம் மற்றும் துணை செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறை கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. இளங்கோ மகேஸ்வரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக மதுரையிலிருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநகராட்சி – நகராட்சி – பேரூராட்சிகளில்

பொதுமக்களுக்கு எவ்விதத் தடையுமின்றி குடிநீர் வழங்க வேண்டும்!

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தல்!

சென்னை, மார்ச் 2-

நேற்று முன்தினம் (29.02.2024) சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1040 MLDக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 1 கோடிக்கும் மேலான பொதுமக்கள் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2071 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள் மற்றும் 52,361 ஊரக குடியிருப்புகளில் உள்ள மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தங்களது சொந்த பராமரிப்பு மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் சீரான குடிநீர் விநியோகத்தை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். உரிய இடைவெளியில் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதை தினந்தோறும் அலுவலர்கள் நேரிடையாக ஆய்வு செய்து அது தொடர்பான அறிக்கைகளை சம்பந்தப்பட்ட இயக்குநரகங்களுக்கு அனுப்பி வைத்திட வேண்டும். மேலும், மேல் நிலை, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தொடர்ந்து முறையாக பராமரித்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்திட வேண்டும். பராமரிப்பு பணிகள் எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படாத

வண்ணம் பணிகள் முடிக்கப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களில் உள்ள கூட்டு குடிநீர் திட்டங்களின்கீழ் பயன் பெறும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவினை வழங்கிட வேண்டும்.

சாலை விரிவாக்கப் பணிகள், மேம்பாலப் பணிகள், மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது சம்பந்தப்பட்ட துறையினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி குழாய்களுக்கு சேதம் ஏற்படாமல் பணிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மூலம் பராமரிக்கப்பட்டுவரும் குடிநீர் திட்டங்கள், நீராதாரங்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.வி.தட்சிணாமூர்த்தி, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இயக்குநர், பேரூராட்சிகள், திரு. கிரன் குராலா, இயக்குநர், நகராட்சி நிர்வாகம், எஸ்.சிவராசு மற்றும் தலைமைப் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள், மண்டல பொறியாளர்கள் உள்பட பல்வேறு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர் –

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! நல உதவிகள் வழங்கிடுவீர்!

பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர், மார்ச் 2 -

பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

முதல்வரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மார்ச் 01, அன்று கொண்டாடப்படுகிறது. இந்த விழா பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும்.

அனைத்து கிளைகளிலும் தி.மு.க. கொடியேற்றி, இனிப்புகள் வழங்க வேண்டும். பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும்.

மேலும் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகையான மாதம்தோறும் ரூ.1000, உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு ரூ.1000 உதவித் தொகை,

மகளிருக்கு இலவச பேருந்து பயணம் உள்ளிட்ட தி.மு.க.ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட எண்ணற்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளையும் பொதுமக்களுக்கு கட்சி நிர்வாகிகள் எடுத்துக் கூற வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளில் அனைத்து கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணியினர், கழக முன்னோடிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அம்பராம்பாளையம் பகுதியில் சுப்ரமணியம் என்பவரின் விவசாய நிலத்தில் தென்னை பயிரில் வேர் வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் வேளாண் உற்பத்தி ஆணையர் / வேளாண்மை உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், தோட்டக்கலை மலை பயிர்கள் துறை இயக்குனர் குமரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக துணை வேந்தர் திருமதி.கீதா லட்சுமி, தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறவாழி ஆகியோர் உள்ளனர்.